எம்.சி.ஓ.பி எண்: 319/2014 தேதி: 02.02.2026

மசா. : 1

பெயர் : துரைராஜ்

த/பெ. : சொக்கரா

வயது : 69

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காரில் பயணம் சென்றேன். என்னுடைய கார்தான் லாாி மீது மோதியது என்றால் சரியல்ல. அதிகாலை 4 மணிக்கு விபத்து நடந்தது என்றால் சரி. எங்கள் டிரைவர் தூக்கக்கலக்கத்தில் சென்றுலாாியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எங்கள் கார் வாகன ஓட்டியின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 11 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று உள்ளேன் என்றால் சரி. அதன்பிறகு தனியாக சிகிச்சை பெற்றேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தொடர்சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்திற்கான வரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. லாாி நின்றதை பார்த்து எங்கள் வாகன ஓட்டி பிரேக் போட்டு இருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. என்னுடைய தொழில், வருமானம், வருமானஇழப்பை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்திற்கு எங்கள் வாகன ஓட்டி காரணம் என்பதால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. மசாஆ 4 ஆவணம் அசல் தாக்கல் செய்யாத காரணத்தால் அந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய கார் வாகன ஓட்டுநர் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.